**பின்னிணைப்பு (ஆ)**

**இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை - செயலாற்றுகை அறிக்கை 2017**

(1) மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்தி, சக்தி முகாமைத்துவம் மற்றும் சக்தித் தகவல் போன்ற மூன்று பிரதான பிரிவுகளின் கீழ் இந்த அதிகார சபையின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு பிரிவினதும் விழிப்புணர்வு செயற்பாடுகள் பற்றிய சுருக்கமான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்தி

- மீளப்புதுப்பிக்கத்தகு சக்தியை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரம் 1,715 ஜி.வொ.ம. ஆகும். 219 மின்னுற்பத்திக் கருத் திட்டங்கள் காணப்படுகின்றன.
- மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்திக் கருத் திட்ட அங்கீகார நடபடிமுறையின் கீழ், தற்காலிக அங்கீகாரமும் (த.அ.) மற்றும் சக்தி அனுமதிப் பத்திரமும் (ச.அ.ப.) விநியோகிக்கப்பட்ட சகல மின்னுற்பத்திக் கருத் திட்டங்களின் முன்னேற்றம் காலாண்டு ரீதியில் கண்காணிக்கப்பட்டு, பிரச்சினை விடயங்களை தீர்ப்பதில் உதவியும் வழங்கப்படுகின்றது.

1.1 மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிக்கும் பொருட்டு உள்ளீடுகளை வழங்கும் நோக்கில் சூரிய சக்தி, காற்று சக்தி, சிறிய நீர்வலு, உயிரணுத் திணிவுச் சக்தி மற்றும் நகர திண்மக் கழிவு சக்தி என்பன பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தவிர, வெப்பக் களஞ்சிய முறைமைகள் போன்ற வளர்ந்து வரும் தொழில் நுட்பங்கள் பற்றிய வள மதிப்பாய்வுகளும் மற்றும் தொழில் நுட்ப ஆய்வுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்தியின் கீழுள்ள கருத் திட்டங்கள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

1.1.1 **வீட்டுக் கூரையின் மேல் நிறுவி சூரிய சக்தி மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் ஊக்குவிப்பு உதவிக் கருத் திட்டம்: ஆ.அ.வ.**

இந்தக் கருத் திட்டத்தின் கீழ், இ.நி.வ.அ.ச. இலங்கையில் ஒளி மின் அழுத்தவியல் அடிப்படையிலான மின்னுற்பத்தியை வினையூக்கி பிரபல்லியத்தும் நோக்கில் அரச துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் சூரிய சக்தி பிவி முன்னோடிக் கருத் திட்டங்களை செயற்படுத்துகின்றது. அரச துறைப் பிரிவு பிரதானமாக முதன்மை வகிக்கின்ற தொழில் நுட்பப் பல்கலைக்கழகங்களின் பொறியியல் பீடங்களில் ஒருமுகப்பட்டுக் காணப்படுகின்றது. பின்வருவன இந்தக் கருத் திட்டத்தின் கீழ் நிறைவு செய்யப்பட்டுள்ள செயற்பாடுகளை சுட்டிக் காட்டுகின்றன.

- ✓ 200 kWp மின் சக்தியை தேசிய க்றிட் மின்சார முறைமைக்கு இணைத்து பேராதெனிய பல்கலைக்கழகம், மொரட்டுவ பல்கலைக் கழகம், ருஹுணு பல்கலைக்கழகம் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக் கழகம் ஆகிய பல்கலைக் கழகங்களில் வீட்டுக் கூரையில் வைத்து மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய நான்கு பிவி சூரிய சக்தி முறைமைகளின் நிறுவுகைப் பணிகள் நிறைவு செய்யப்பட்டன.
- ✓ வீட்டுக் கூரையில் வைத்து மின்சாரத்தை உற்பத்தி செய்யும் 22 சூரிய சக்தி முறைமைகளின் நிறுவுகைப் பணிகளும் நிறைவு செய்யப் பட்டன. 1800 kWp இணைப்புகள் தேசிய க்றிட் மின்சார முறைமைக்கு சேர்க்கப்பட்டன.

1.2. சூரியபள சங்கிராமய நிகழ்ச்சித் திட்டம்

- ✓ 296 சூரிய சக்தி உற்பத்தித் தரப்புகள் 2017 ஆம் ஆண்டு இறுதியில் நி.வ.அ. சபையில் பதிவு செய்யப் பட்டிருந்தன.
- ✓ 135 சூரிய சக்தி முறைமைகள் 'ரிவிஅருண' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சமய ஸ்தலங்களில் நிறுவப்பட்டன. இந்த சக்தி முறைமைகளிலிருந்து மின்சார முறைமைக்கு 270 kW மின்சாரம் சேர்க்கப்பட்டது.

- ✓ இ.நி.க.நி. இன் கூட்டொத்துழைப்பில் சூரிய சக்தி பிவி தொடர்பான பதினேழு நியமங்கள் வெளியிடப்பட்டன. சேவைகளை வழங்குகின்ற தரப்புகளுக்கு மூன்று தொழில் நுட்ப வேலையரங்குகளும் மற்றும் ஒரு சாதாரண வேலையரங்கும் நடத்தப்பட்டன.
- ✓ இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 100 மெ.வொ. மின்சாரம் எனும் திருப்பு முனையை அடையும் கரும விடயம் மேன்மை தங்கிய ஜனாதிபதியின் மேலான பங்குபற்றலுடன் ஒரு வைபவத்தில் பூர்த்தியாகியது.

1.3. காற்று வளங்கள் அளவீடு

- ✓ பலாங்கொட, சிதா எலிய, கள மெட்டிய, முல்லி புரம், சிலாவத்துறை, நடுக்குடா, பொன்னாலை, பூனகரி மற்றும் கோகிலாய் கடற்கரை முதலிய காற்று சக்தி அளவீட்டுக் கோபுரங்களிலிருந்து தரவுகள் சேகரிக்கப் பட்டு வருகின்றன.
- ✓ காற்று சக்தி வள வரை படங்கள் தயாரிக்கப் பட்டு வருகின்றன. சீதா எலிய, புத்தளம், சூரிய கந்தை, யாழ்ப்பாணம் மற்றும் பூனகரி ஆகியவற்றின் நிமித்தம் மேலெழுந்த வாரியான காற்று சக்தி வரை படங்கள் தயாரிக்கப் பட்டன.
- ✓ காற்று சக்திக் கோபுர பராமரிப்பு ஒப்பந்தம் தொடர்பான பெறுகை நடபடிமுறை நிகழ்ந்து வருகின்றது.

1.4. ஆதார மின்சார விநியோக நம்பத்தகு தன்மை மேம்பாட்டு கருத் திட்டம்

வட மாகாணத்தின் நைனாதீவு, அனலைதீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய பகுதியில் வாழும் குடும்பங்களினது வாழ்வாதாரங்களையும் மற்றும் அந்தக் குடும்பங்களின் நிலங்களையும் மேம்படுத்துவதில் இந்தக் கருத் திட்டம் ஒருமுகப்பட்டு காணப்படுகின்றது.

1.5. நிலைபெறுதகு உயிரணுத் திணிவுச் சக்தி உற்பத்தியையும் மற்றும் நவீன உயிரியல் சக்தித் தொழில் நுட்பங்களையும் உக்குவித்தல்

- ✓ இந்தக் கருத் திட்டத்தின் கீழ், ஹோமாகவில் ஒரு எரிவிறகு களஞ்சிய சாலையை தாபிக்கும் கரும பணி 2017 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப் பட்டது. மொனராகல் மற்றும் குருனாகல் ஆகிய பகுதிகளில் மேலும் இரண்டு அத்தகைய முனையங்களை தாபிப்பதற்கான அத்தகைய பணிகள் ஆரம்பிக்கப் பட்டன. பாரியளவான கைத்தொழில்களிலும் மற்றும் சி.ந.அ. தொழில்முயற்சிகளிலும் 24 உயிரணுத் திணிவுச் சக்திக் கருத் திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டன.
- ✓ அடி மட்டத்தில் எரிவிறகு தாவரங்களை வளர்க்கும் தரப்புகளின் நன்மை கருதி எரிவிறகு தாவரங்கள் வளர்ப்பு பற்றிய ஒரு கைந்நூல் தயாரித்து வெளியிடப்பட்டது.
- ✓ தெங்கு பயிர்ச் செய்கை சபையின் உதவியுடன் 600 ஹெக்டேயர் நிலப் பரப்பில் எரிவிறகு தாவரங்கள் வளர்ப்புக்கான ஆரம்ப செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.
- ✓ தேயிலைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு உயிரணுத் திணிவுச் சக்தி தொடர்பான ஒரு 3 நாள் முழு பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் நடத்தப் பட்டது.

1.6. இலங்கையில் மின்சக்தி உற்பத்தியில் காணப்படும் சரியான தணிப்பு நடவடிக்கையும் மற்றும் இறுதிப் பாவனைப் பிரிவுகளும்

- ✓ அதி உயர் சக்தி வினைத்திறன் வாய்ந்த மோட்டார் நிறுவுகை, சூரிய சக்தி பிவி நெட்-மீற்றரிங் மற்றும் உயிரணுத் திணிவுச் சக்தி செயற்படுத்துகை விடயங்கள் என்பன 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன.
- ✓ சக்தித் துறைக்கான ஒரு எல்லை குறைப்பு ஆகுசெலவு (MAC) வளையி தயாரிக்கப்பட்டு சக்தித் துறை தொடர்பான NAMA தலையீட்டு நடவடிக்கைகளில் பல தகவு திறன்கள் பகுப்பாய்வு மற்றும் தடைகள் பகுப்பாய்வு என்பன தொடர்பான ஒரு வேலையரங்கு நடத்தப்பட்டது.
- ✓ 40 உயிரணு திணிவு சக்தி உருஞ்சிகள் நிறுவப்பட்டன. தேயிலை தொழிற்சாலைகளில் VFD களின் நிறுவும் பணி மேற்கொள்ளப்பட்டது.

- ✓ உயிரணுத் திணிவுச் சக்தி உருஞ்சிகளின் நிறுவுகையில் தரம் சார்ந்த வித்தியாசமான சக்தி கட்டுப்பாட்டு உந்திகள் பற்றிய ஐந்து வேலையரங்குகள் மாகாண சபைகளில் நடத்தப்பட்டன.

1.7. பூனகரி காற்று சக்திப் பேட்டை

இலங்கையில் சிறந்தது முதல் மிகச் சிறந்தது வரையான காற்று சக்தி வள சாத்தியம் சுமார் 5,000 கி.மீ.$^2$ நிலப் பரப்பில் காணப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. பூனகரி ஒரு பிரதான ஸ்தலமாகும். அது காற்று சக்தி மூலம் 100 மெ.வொ. மின்சாரத்திற்கும் அதிகமான மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய சாத்தியம் காணப்படும் ஒரு ஸ்தலமாக இனங்காணப்பட்டுள்ளது. பூனகரி காற்று சக்திப் பேட்டைக்கு வசதி அளிக்கும் பொருட்டு பின்வரும் நிலப் பகுதிகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

1) பூனகரி நிலப் பரப்பின் கிழக்கு மற்றும் மேற்கு கடலோரமாக அமைந்துள்ள 200 மீற்றர் அதி விசாலமான காற்று வள சக்தி சாத்தியமுடைய கடல் நிலப் பகுதி.
2) உத்தேச 2x100 சூரிய சக்தி மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகளின் நிமித்தம் தேவைப்படுத்தப்படும் நிலப் பகுதி.

2. சக்தி முகாமைத்துவம்

2.1. சக்தி முகாமைத்துவ முறைமைகளின் தாபிப்பு

- ✓ இ.நி.வ.அ.ச. ISO50001 சக்தி முகாமைத்துவ முறைமைகளை அறிமுகப் படுத்தியதன் ஊடாக வர்த்தகம், கைத்தொழில் மற்றும் வீடு ஆகிய பிரிவுகளில் சக்தி மாற்றத்திற்கு உதவுகின்றது.
- ✓ மொத்தமாக தனியார் துறையில் 205 சக்தி முகாமையாளர்களுக்கும் 16 சக்திக் கணக்காய்வாளர்களுக்கும் உத்தரவாத சான்றிதழ்கள் வழங்கப் பட்டன. ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள SP/PCMD/6/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச துறையில் சுமார் 150 சக்தி முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் நியமிக்கப் பட்டனர்.

2.2. நியமங்களையும் மற்றும் ஒழுங்குவிதிகளையும் அறிமுகப்படுத்துதல்

- ✓ CFL மின் குமிழ்கள்: CFL மின் குமிழ்களுக்கு சக்தி முத்திரையிடுவது தொடர்பான திருத்திய நியமம் பிரசுரிக்கப்பட்டது. திருத்தம் பற்றிய ஒழுங்குவிதி வகுத்தமைக்கப்பட்டு, சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.
- ✓ குளிரூட்டிகள்: சக்தி முத்திரையிடுவது தொடர்பான நகல் நியமம் தயாரிக்கப்பட்டு இலங்கை நியமங்கள் கட்டளைகள் நிறுவகத்திற்கு (இ.நி.க.நி.) அனுப்பி வைக்கப்பட்டது. குறித்த இந்த நியமம் விரைவில் பிரசுரிக்கப் படவுள்ளது.
- ✓ குளிர்சாதனப் பெட்டிகள்: ஏனைய நாடுகளிலிருந்து அதையொத்த நியமங்களைத் தழுவி புதிய நவீனமான ஒரு நியமம் தொகுக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. முழுமையான அளவில் சக்தி முத்திரையிடும் செயல் நடவடிக்கை முயற்சிக்கப்படுவதற்கு முன்னர், குளிர் சாதனப் பெட்டிகளுக்கான ஆகக்குறைந்த சக்தி செயல் திறன் நியமங்கள் (ஆ.ச.செ.நி.) தயாரிக்கப்படும்.
- ✓ LED மின் குமிழ்கள்: தன்னார்வ சக்தி முத்திரையிடும் செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு LED மின் குமிழ்கள் நிமித்தம் செயற்படுத்தப்பட்டது. ஒரு கட்டாய அடிப்படையில் குறித்த திட்டத்தை செயற்படுத்தும் பொருட்டு நகல் ஒழுங்கு விதிகளும் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு விரைவில் அனுப்பி வைக்கப்படும்.
- ✓ கணனிகள்: சக்தி முத்திரையிடல் பற்றிய நகல் நியமம் தயாரிக்கப் பட்டு இலங்கை நியமங்கள் மற்றும் கட்டளைகள் நிறுவகத்திற்கு (இ.நி.க.நி.) அனுப்பி வைக்கப்பட்டது. குறித்த இந்த நியமம் விரைவில் பிரசுரிக்கப் படவுள்ளது.
- ✓ கூரை மின் விசிறிகள்: ஆய்வுகூடப் பரிசோதனை உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. பரிசோதனை வசதி நிறுவுகை நிகழ்ந்து வருகின்றது.
- ✓ சக்தி வினைத் திறன் கட்டிடங்கள் தொடர்பான திருத்திய செயன்முறை விதிக் கோவையை செயற்படுத்துவதற்கு ஒரு ஒழுங்குவிதி தயாரிக்கப்பட்டது. கட்டிடத்தை தரப்படுத்தும் ஒரு முறைமை அடங்கலாக உடனடியாக செயற்படுத்தும் பொருட்டு முழுமையான செயற்படுத்துகைத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

- ✓ இலங்கையில் நிலைபெறுதகு சக்தி வதிவிடங்கள் பற்றிய வழிகாட்டல் ஆவணம் மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு தற்பொழுது அச்சிடும் கட்டத்திலுள்ளது.

2.3. ஆலோசனை மற்றும் உசாதுணை சேவைகள்

- ✓ எட்டு நிறுவனங்களில் ISO50001 சக்தி கணக்காய்வுகள் நடத்தப்பட்டன.
- ✓ சக்தி வினைத் திறன் மேம்பாடு (ச.வி.மே.), சக்திக் கணக்காய்வு சேவை (ச.க.சே.), தொழில் நுட்ப விநியோகத் தரப்புகள் (தொ.நு.வி.த.) ஆகிய வகுதிகளின் கீழ் 44 சக்தி சேவை கம்பனிகள் (ESCO) பதிவு செய்யப் பட்டன. இற்றைப்படுத்திய ESCO கம்பனிகள் பட்டியல் இணையத் தளத்தில் பிரசுரிக்கப் பட்டுள்ளது.
- ✓ களுத்துறை STF பயிற்சிப் பாடசாலையில் ஒரு நடமாடும் சக்திக் கணக்காய்வு நடத்தப்பட்டது.
- ✓ வடமேல் மாகாணத்தின் ITN இயந்திராதிகள் உபகரண அதிகார சபையில் விரிவான ஒரு சக்திக் கணக்காய்வு நடத்தப்பட்டது.
- ✓ விரிவான சக்திக் கணக்காய்வு UCSC (கொழும்பு பல்கலைக்கழகம்) இல் நடத்தப் பட்டு வருகின்றது.
- ✓ கொழும்பு பாதுகாப்பு கல்லூரி மற்றும் பெலவத்த செவனகல சினித் தொழிற்சாலை ஆகியவற்றில் விரிவான சக்திக் கணக்காய்வை நடத்தும் பொருட்டு உசாதுணை சேவை, பயிற்சி மற்றும் தொழில் நுட்ப உதவி என்பன வழங்கப்பட்டன.
- ✓ 4 ESCO கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, மத்திய மாகாணத்திலுள்ள அரச நிறுவனங்களில் பத்து சக்திக் கணக்காய்வுகள் நிறைவு செய்யப் பட்டன.
- ✓ அரச வைத்தியசாலைகளிலும் மற்றும் நிறுவனங்களிலும் பதினாறு விரிவான சக்திக் கணக்காய்வுகளை நடத்தும் நிமித்தம் உகந்த பொருத்தமான ESCO களை தேர்ந்தெடுப்பதற்கான ஒரு கேள்வி மனு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
- ✓ கருவி சாதனங்களை வாடகைக்கு விடும் நாட்களின் எண்ணிக்கை 1,200.

2.4. சாதனைகளுக்கான விருது வழங்கல்

- ✓ இ.நி.வ.அ.ச. புதிய தொழில் நுட்பங்கள் மற்றும் அறிவு பரம்பல் ஆகிய பிரிவுகளில் திட்டங்களை அறிமுகப்படுத்தும் நோக்கில் 'விதுல்கா சக்திக் கண்காட்சி நிகழ்ச்சித் திட்டத்தை நடத்தியதனூடாக தேசிய மட்ட ஊக்குவிப்பு செயற்பாடுகளில் ஈடுபடுகின்றது. இந்த அதிகார சபை சக்தி மாற்றலுடன் தொடர்புடைய உற்பத்திகளையும் மற்றும் சேவைகளையும் மேம்படுத்த சக்தித் துறை நிறுவனங்களுக்கும், உபகரணங்களை விநியோகிக்கும் தரப்புகளுக்கும் மற்றும் உற்பத்தித் தரப்புகளுக்கும், புத்தாக்குநர் தரப்புகளுக்கும், கல்வியலாளர்களுக்கும் தனியான பிரத்தியேக வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்கின்றது.
- ✓ விதுல்கா தேசிய சக்திக் கண்காட்சி நிகழ்ச்சித் திட்டம் BMICH மண்டபத்தில் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை நடத்தப்பட்டது. மீளப்புதுப்பிக்கத்தகு சக்தித் தொழில் நுட்பங்கள், சக்தி முகாமைத்துவம் என்பன தொடர்பான ஆறு வர்த்தக மற்றும் நிறுவன சார் கண்காட்சிக் கொட்டகைகள் இந்த சக்திக் கண்காட்சி நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடங்கியிருந்தன. பொது மக்களுக்கு தொழில் நுட்பங்கள், உற்பத்திகள் மற்றும் சேவைகள் தொடர்பான தகவல்கள் இந்தக் கண்காட்சியினூடாக வழங்கப்பட்டன.

2.5. துறை சார்ந்த விஷேட சக்தி முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்கள்

- ✓ இ.நி.வ.அ.ச. மாகாண மட்டத்தில் சக்தி முகாமைத்துவம் சார் நிகழ்ச்சித் திட்டங்களை தயாரித்து செயற்படுத்துவதற்கு உதவுகின்றது. தேயிலை தோட்டத் துறையிலுள்ள தேயிலைத் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் 60 முகாமையாளர்களுக்கும் மற்றும் ஊழியர்களுக்கும் தென் மற்றும் மத்திய மாகாணங்களில் சக்தி முகாமைத்துவம் தொடர்பான இரண்டு நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. குறித்த இந்த நிகழ்ச்சித் திட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பயிற்சி நிறுவகத்தினால் (SLEMA) நடத்தப்பட்டது.

3.5. ஊடக நிகழ்ச்சித் திட்டங்கள்

- ✓ ஊடகவியலாளர்களுக்கான முதலாம் கட்ட சக்தி மற்றும் சுற்றாடல் பற்றிய பாடநெறி நடத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டது. பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்த பதினேழு ஊடகவியலாளர்களுக்கு பாடநெறி சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அத்தகைய இரண்டாம் கட்ட நிகழ்ச்சித் திட்டம் 2017 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆம் திகதி BMICH மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் பதினைந்து ஊடகவியலாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்தப் பயிற்சி ஒழுங்குகள் 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நிறைவு செய்யப்படும்.
- ✓ சக்தி மாற்றல் தொடர்பான தொடர் கட்டுரைகள் 'நவலிய' செய்திப் பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்டுள்ளன.
- ✓ சூரிய சக்தி தொடர்பான தொடர் கட்டுரைகள் 'விதுசர' செய்திப் பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்டுள்ளன.

2.6. சக்திப் பாதுகாப்பில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்ளல்

- ✓ இலங்கையில் சக்தி முகாமைத்துவ செயன்முறைகளின் அபிவிருத்தி தொடர்பில் புதிய மற்றும் நவீன தொழில் நுட்பங்களை பின்பற்றுவதில் காணப்படும் சாத்தியத்தை ஆராயும் நிமித்தம் முன்னெடுப்பு சார்ந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சக்தியின் செயல் திறனை சரியான முறையில் மதிப்பிடுவதில் உதவக்கூடிய தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தின் (தே.ஆ.நி.) உதவியுடன் வடிவமைக்கப்பட்டுள்ள குழாய், ரேடியேற்றர்கள், பதனிடும் கட்டுப்பாட்டு சாதனங்கள் மற்றும் பரவும் பொறிமுறைகள் என்பன அடங்கலாக தேயிலை உலர்த்தும் ஒரு நியம இயந்திரம் வடிவமைக்கப்பட்டது. தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்துடன் (தே.ஆ.நி.) கைச்சாத்திடும் பொருட்டு பு.ஒ. தயாரிக்கப் பட்டுள்ளது.

2.7. சக்திப் பாதுகாப்பில் முன்னோடிக் கருத் திட்டங்களைத் தாபித்தல்

- ✓ ஒரு சக்தி வளத்திலிருந்து பயனுள்ள விதத்தில் குளிராக்கல் மற்றும் வெப்பமாக்கல் மற்றும் ஒரேநேரத்தில் மின்சாரத்தை உற்பத்தி செய்தல் ஆகியவற்றை குறிப்பிடும் ட்ரை-ஜெனரேஷன் அல்லது ஒன்றிணைந்த குளிராக்கல் வெப்பமாக்கல் மற்றும் சக்தி (CCHP), சக்தியின் ஆகக் கூடிய பயன்பாட்டிற்கு கிடைக்கக் கூடிய மிகச் சிறந்த ஒரு முறையியலாகும். இந்த முறையியலின் மூலமாக 80% வீதத்திற்கும் அதிக அளவு வினைத் திறன்களை அடைய முடியும். இந்த நிலையில், இ.நி.வ.அ.ச. ஹோட்டல்கள், புடவை மற்றும் ஆடை, மற்றும் கைத்தொழில் வலயங்கள் முதலியன போன்ற துறைகளுக்கு ட்ரை-ஜெனரேஷன் முறைமையை அறிமுகப்படுத்தும் சாத்தியங்கள் பற்றி ஆராய்ந்து வருகின்றது. பிரேரணைகளை தேர்ந்தெடுப்பதற்கான இறுதி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2.8. இயக்கச் செயற்பாட்டு கேள்வி சார் முகாமைத்துவ (ODSM) நிகழ்ச்சித் திட்டம்

- ✓ சக்தி வினைத் திறன் வாய்ந்த குளிரூட்டி: A/C களின் சக்தி வினைத் திறன் பற்றிய ஒரு சுற்றறிக்கை மின்வலு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சின் ஊடாக வெளியிடப்பட்டது. அரச துறை சக்தி முகாமைத்துவ உத்தியோகத்தர்களுக்கும் (நாடளாவிய) அதே நேரம் மேல் மாகாணத்திலுள்ள அத்தகைய சக்தி முகாமைத்துவ உத்தியோகத்தர்களுக்கும் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு இரண்டு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப் பட்டன.
- ✓ சக்தி வினைத் திறன் வாய்ந்த குளிர்சாதனப் பெட்டிகள்: இலங்கையின் சந்தையிலிருந்து சக்தி வினைத் திறனற்ற குளிர் சாதனப் பெட்டிகளை கட்டம் கட்டமாக ஒழிப்பது பற்றிய ஒரு நகல் ஒழுங்குவிதி தயாரிக்கப் பட்டு வருகின்றது. இது நிகழ்ச்சித் திட்டத்தின் அக்கறையுடைய தரப்புகளினால் மீளாய்வு செய்யப் பட்டு வருகின்றது.
- ✓ சக்தி வினைத் திறனற்ற குளிர் சாதனப் பெட்டிகளை அகற்றி விட்டு அவற்றுக்குப் பதிலாக சக்தி வினைத் திறன் வாய்ந்த குளிர் சாதனப் பெட்டிகளை மீளிடுவது தொடர்பான ஒரு திட்டமும் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

- ✓ சக்தி வினைத் திறன் வாய்ந்த அதி குளிர் சாதனப் பெட்டிகள்: ESCO களுக்கு 2017 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி ஒரு கூட்டம் நடத்தப் பட்டது. அதி குளிர் சாதனப் பெட்டிகள் பற்றிய தரவுகள் சேகரிக்கப் பட்டு வருகின்றன. குறித்த நிகழ்ச்சித் திட்டத்திற்கான ஒரு திட்டத்தைத் தயாரிக்கும் பொருட்டு டெக்கோஷால் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனம் மற்றும் CBL நிறுவனம் ஆகியவற்றின் உள்ளீட்டு வசதிகளைப் பெற்றுக் கொள்ளும் நிமித்தம் அந்த நிறுவனங்களின் பொறியியலாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.
- ✓ சக்தி வினைத் திறன் வாய்ந்த மோட்டார்கள்: இந்த நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தும் பொருட்டு லெகோ நிறுவனத்தின் அதிகார பிரதேசத்திலிருந்து ஒரு சில கைத்தொழில்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. 50 கொத்தணிக் கைத்தொழில்களில் குறித்த நிகழ்ச்சித் திட்டத்தை மேற்கொள்ளும் பொருட்டு, ஒரு ஆய்வு திட்டமிடப்பட்டு வருகின்றது.
- ✓ மின்னும் மின்குமிழ்களை ஒழித்தல்: 'சக்தி' எனும் LED மின்குமிழ்களைப் பகிர்ந்தளிக்கும் திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் இலக்குக் குழுவில் 2017 ஆம் ஆண்டில் மாதாந்தம் சராசரியாக 90 kWh மின்சாரத்திற்கு குறைந்த அளவான மின்சாரத்தை நுகர்ந்த வீட்டு மின்சார வாடிக்கையாளர்கள் அடங்குகின்றனர். இ.மி.ச., LECO லெகோ ஆகியவற்றின் பிரதிநிதிகளினூடாக தகுதி வாய்ந்த மின்சார நுகர்வு வாடிக்கையாளர்களின் நிமித்தம் 10 மில்லியன் LED மின் குமிழ்களைப் பகிர்ந்தளிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. குறித்த மின் குமிழ்கள் தொடர்பான செலவுகள் வட்டி இன்றி 24 மாத தவணைக் கட்டண அடிப்படையில் மீளறவிடப்படும். LED மின் குமிழ்களை விநியோகிக்க பொருத்தமான ஒரு விநியோகத் தரப்பை போட்டித் தன்மை வாய்ந்த கேள்வி மனு அழைத்தல் நடைமுறை ஊடாக தேர்ந்தெடுக்கும் கருமம் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. கண்காணிப்பு, சேமிப்பு சார்ந்த கணிப்பீடுகள், LED மின் குமிழ்கள் இயங்காது மீளிடப்பட்டமை மற்றும் பிற்பட்டகால மதிப்பீடு என்பவற்றின் நிமித்தம் பங்குபற்றிய மின்சாரக் கணக்குகளை வைத்திருக்கின்ற கணக்கு உரிமையாளர்களினதும், மின்னும் மின் குமிழ்களை திருப்பி ஒப்படைத்த நபர்களினதும் மற்றும் LED மின் குமிழ்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள நபர்களினதும் விபரங்கள் சேகரிக்கப்படுதல் வேண்டும். கையில் எடுத்து செல்லக் கூடியவாறான உபகரணங்களுக்கும் மற்றும் ஆவணமயப்படுத்தலுக்கும் தேவைப் படும் அன்ட்ரொயிட் அப் மற்றும் சம்பந்தப்பட்ட மென்பாகம் என்பன அடங்கலாக மின் குமிழ் பற்றிய தகவல் பரம்பல் செய்யும் திட்டம் முழுமையாக தயாரிக்கப்பட்டுள்ளது.
- ✓ பசுமைக் கட்டிடம்: சக்தி வினைத் திறன் கட்டிடங்கள் தொடர்பான திருத்திய செயன்முறை விதிக் கோவை - 2018 ஆவணத்திற்கு இணங்க ஒரு கட்டிடத் தரப்படுத்தல் முறைமை அடங்கலாக முழுமையான செயற்படுத்துகைத் திட்டம் உடனடி செயற்படுத்துகையின் நிமித்தம் தயாரிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட அரச கட்டிடங்களில் கூரை மேல் வைத்து மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய சூரிய சக்தி முறைமைகள் நிறுவுகையின் நிமித்தம் 350 மில்லியன் இலங்கை ரூபா நிதியை செலவிடுவதற்கான ஒரு திட்டமும் தயாரிக்கப்பட்டது. ஏழு புவியியல் கொத்தணிகளிலும் மற்றும் சேவைகள் வழங்கும் நான்கு தரப்புகளிலும் சம்பந்தப்படும் பெறுகை விடய கருமமும் நிறைவு செய்யப்பட்டது.
- ✓ ஸ்மார்ட் - ஹோம்: இலங்கையில் நிலைபெறுதகு வதிவிடங்களுக்கான வழிகாட்டல் - ஆவணம் மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு அச்சீட்டிற்கு முற்பட்ட கட்டத்திலுள்ளது. வீட்டுக் கூரையின் மீது வைத்து மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய 'சூரியபள சங்கிராமய' எனும் நிகழ்ச்சித் திட்டத்தை ஊக்குவிப்பதற்கான ஒரு அக்கறையுடைய வட்டி வீத கொள்வனவுத் திட்டம்' 1,500 மில்லியன் இலங்கை ரூபா நிதியைப் பயன்படுத்தி செயற்படுத்தப்பட்டது. பன்னிரெண்டு வங்கிகள் 2017 ஆம் ஆண்டு இறுதியளவில் துல்லியமாக ஈடுபட்டுள்ளன.

3. சக்தித் தகவல் மற்றும் விழிப்புணர்வு

- ✓ இலங்கை சக்திச் சமநிலை 2016 ஆவணம் தொகுக்கப்பட்டுள்ளது. இது அச்சிடப்பட்டு வருகின்றது. 2016 ஆம் ஆண்டின் தரவுகளைக் கொண்டு இணையத் தளம் இற்றைப்படுத்தப்பட்டது.
- ✓ சக்திச் சமநிலை இணையத் தளம் இற்றைப்படுத்தப்பட்டது.
- ✓ இறுதிப் பயனர் சக்தி நுகர்வு மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன.
- ✓ நாடளாவிய எரிபொருள் நிரப்பு நிலைய ஆய்வுக்கான மதிப்பாய்வுத் திட்டம் குடிசன மதிப்பீட்டுப் புள்ளிவிபரங்கள் திணைக்களத்தின் உதவியைக் கொண்டு வகுத்தமைக்கப்பட்டது. இந்த மதிப்பாய்வு தொடர்பான அறிக்கை தொகுக்கப்பட்டு வருகின்றது.

1.8. சூரிய சக்தி அபிவிருத்தி தொடர்பான ஆராய்ச்சி

- ✓ பாரியளவான சூரிய சக்தி உற்பத்தி அபிவிருத்தியில் காணப்படும் தொழில் நுட்பத் தலையீட்டு நடவடிக்கைகள் தொடர்பான இரண்டு உயர் ஆராய்ச்சிக் கருத் திட்டங்களில் ஒரு ஆராய்ச்சிக் கருத் திட்டம் மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் திணைக்களம், பேராதெனிய பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடம் ஆகியவற்றின் கூட்டொத்துழைப்பில் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது.
- * இலங்கையில் பாரியளவான சூரிய சக்தி பிவி அபிவிருத்தி அடங்கலாக பாதுகாப்பான விநியோகம் உறுதிசெய்யப்பட்டது.
- * சூரிய சக்தி பிவி இன் சக்தி வினைத் திறன் மேம்பாடு ஒரு DC நுண் க்றிட் முறைமையின் ஊடாக உறுதிசெய்யப்பட்டது.

3.2. தேசிய சக்தி மாநாடு

- ✓ தேசிய சக்தி மாநாடு 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19, 20 ஆம் திகதிகளில் நடத்தப்பட்டது. சக்தி வினைத் திறன், மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி ஆகிய இரண்டு பிரிவுகளின் கீழ் 25 ஆராய்ச்சிப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. கொள்கை ஆக்கும் தரப்புகளினதும், ஆராய்ச்சித் தரப்புகளினதும், கைத்தொழில் தரப்புகளினதும், கல்விமான்களினதும் பங்குபற்றலில், இந்த பிரிவுகளிலான தேசிய நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஆ.அ. சார் உள்ளீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கான முறையியல்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. 'உயிரணுத் திணிவுச் சக்தி பற்றிய தேசிய புத்தாக்க ஆயமும்' உயிரணுத் திணிவுச் சக்தி தொடர்பான புதிய புத்தாக்கங்களையும் மதிப்பீடு செய்தது.

3.3. சக்தி சார்ந்த ஒரு கல்வி நிகழ்ச்சித் திட்டத்தைத் தயாரித்தல்

- ✓ பாடசாலை சக்திக் குழுக்கள் நிகழ்ச்சித் திட்டம் சக்தி சார்ந்த கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கியமான நிகழ்ச்சித் திட்டமாகும். ஒவ்வொரு பாடசாலையையும் உள்ளடக்கும் வகையில் நாடளாவிய ரீதியில் மொத்தம் 3,000 சக்திக் குழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளன.
- ✓ பாடசாலை சக்திக் குழுக்களுக்கு விருதுகளை வழங்குதல்: 2016 ஆம் ஆண்டிற்கான விருது வழங்கல் வைபவம் குழுமிருந்த பிரமுகர்களுக்கு மத்தியில் 2017 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 28 ஆம் திகதி BMICH மண்டபத்தில் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.
- ✓ கண்டுபிடிப்புகள், கண்காட்சிகள், கருத் திட்டங்கள், ஆராய்ச்சிகள், மதிப்பாய்வுகள், டிஜிட்டல் சுவரொட்டிகள், குறுங் திரைப் படங்கள், நாடகங்கள் மற்றும் விவாதங்கள் என்பனவற்றில் சக்தி சம்பந்தமான புத்தாக்க அணுகுமுறைகளின் பாவனையை முன்னேற்றுதல் மற்றும் ஊக்குவித்தல் ஆகியவற்றுக்கு பிரத்தியேகமான பங்களிப்பை நல்கிய பாடசாலை மாணவர்களுக்கு பணப் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.
- ✓ ஒன்பது மாகாணங்களை உள்ளடக்கி 88 அரச பாடசாலைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 550 மாணவர்களுக்கு விருதுகள் வழங்கி வைக்கப் பட்டன. SEC நிகழ்ச்சித் திட்டத்திற்கு அர்ப்பணிப்புடன் சேவைகளை நல்கிய ஒன்பது மாகாணங்களில் சக்திப் பாடத்தை கற்பித்த சிறந்த ஆசிரியர்களுக்கும், சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கும், உதவி கல்விப் பணிப்பாளர்களுக்கும்/

பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அவர்களின் சேவைகளை கௌரவித்து பாராட்டும் முகமாக மேலும் விருதுகள் வழங்கப்பட்டன.

3.4. தொடர்பாடல் நிகழ்ச்சித் திட்டம்

- ✓ ஜனாதிபதி செயலகத்தினாலும் மற்றும் திருகோணமலை தேசிய இளைஞர் மன்றத்தினாலும் கூட்டாக இணைந்து BMICH மண்டபத்தில் நடத்தப்பட்ட 'திரசார லங்கா' கண்காட்சி நிகழ்ச்சித் திட்டத்தில் இந்த அதிகார சபை பங்குபற்றியது.
- ✓ 17 பாடசாலைக் கண்காட்சி நிகழ்ச்சித் திட்டங்களில் இந்த அதிகார சபை பங்குபற்றியது.
- ✓ ஊடக அமைச்சின் செயலாளரினது அங்கீகாரம் கிடைக்கும் என்ற எண்ணத்தில் களணிப் பல்கலைக்கழகத்தின் வெகுஜன தொடர்பாடல் பிரிவினால் சக்தி ஊடகவியலாளர் விருது வழங்கல்கள் தொடர்பான வழிகாட்டல் ஆவணம் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டுள்ளது.
- ✓ இந்த அதிகார சபை கேகாலை நகரில் சுற்றாடல் தின நிகழ்ச்சித் திட்டத்தை ஏற்பாடு செய்து அதில் பங்குபற்றியது.

**<u>கணக்காய்வு விசாரணை அறிக்கைகளிலும் மற்றும் கணக்காய்வு அறிக்கைகளிலும் சுட்டிக் காட்டப் பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையினால் மேற்கொள்ளப் பட்டுள்ள நடவடிக்கைகள் - கணக்காய்வாளர் அதிபதியின் 2018.10.17 ஆம் திகதிய கணக்காய்வு அறிக்கை</u>**

| கணக்காய்வு குறிப்பு இலக்கம் | 2017 கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | அத்தகைய விடயங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் |
|---|---|---|
| **2**<br>2.1 | **<u>நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்</u>**<br>2017 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்று 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி வரையிலும் கணக்காய்வின் நிமித்தம் சமர்ப்பிக்கப்படாதிருந்தமை. | 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |
| 2.3 | **<u>கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்</u>**<br>(அ) RCL நிலையம் தொடர்பில் இலங்கை மின்சார சபையிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 8,033,270 ரூபா தொகை 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி வரையும் அறவிடப்படாதிருந்தமை. | இந்த நிலுவைத் தொகையை செலுத்துவதற்கு அமைச்சின் கணக்காய்வு மற்றும் குழுக் கூட்டத்தில் இலங்கை மின்சார சபை (இ.மி.ச.) உடன்பட்டது. |
| 2.4 | **<u>சட்டதிட்டங்கள், ஒழுங்குவிதிகள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் ஒவ்வாமை</u>**<br>(அ) ஒரு அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணிக்கும் பொருட்டு ஒரு காணித் துண்டைக் கொள்வனவு செய்வதற்கும் மற்றும் அந்தக் கட்டிடத்திற்கான வடிவமைப்புத் திட்டத்தைத் தயாரிப்பதற்கும் என 2015 ,2016 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளில் செலவு செய்யப்பட்ட மொத்தம் 54,263,517 ரூபா தொகை அதிகார சபையினால் அந்த நிதியத்தின் முதலீடுகளிலிருந்து நீக்கப்பட்டிருக்காமை. | காணியை வாங்குவதற்காக 54,263,517/- ரூபா தொகை செலவு செய்யப்பட்டது. எனினும், எதிர்காலத்தில் இந்தக் கருத் திட்டத்தை ஆ.அ.வ. மேற்கொள்ளும் போது, குறித்த தொகையை திருப்பிச் செலுத்த எதிர்பார்க்கப்படுகிறது. |
| | (ஆ) (i) பொருட்களின் பதிவேட்டுப் புத்தகம் பேணப்பட்டிருக்காமை. | பொருட்கள் பதிவேட்டுப் புத்தகங்கள் பேணப்படுகின்றன. |
| | (ii) சொத்துக்கள் பௌதீக ரீதியில் சரிபார்க்கப்பட்டு<br>உறுதிசெய்யப்பட்டிருக்காமை. | 2017 ஆம் ஆண்டிற்கான சொத்துக்களின் பௌதீக ரீதியான செவ்வைபார்த்தல் விடயம் ஏற்கெனவே நிறைவு செய்யப்பட்டுள்ளது. . |
| | (இ) (i) நிலையான சொத்துக்களின் பட்டியலொன்று குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் பேணப்பட்டிருக்காமை. | இதனை 2018 ஆம் ஆண்டில் சீராக்க முடியும். |
| | (ii) கணனி, துணைப் பாகங்கள் மற்றும் மென்பாகங்கள் என்பன தொடர்பில் நிலையான சொத்துக்களின் பட்டியலொன்று பேணப்பட்டிருக்காமை. | கணனிகள், துணைப்பாகங்கள் மற்றும் மென்பாகங்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடுகள் பேணப்படுகின்றன. |
| | (ஈ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியின்றி இந்த அதிகார சபையின் பொறியியலாளர் பதவியை வகிக்கும் பொறியியலாளர்களுக்கு 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் 2018 ஆம் ஆண்டு மே மாதம் வரை 7,980,000 ரூபா தொகை தொழில் சார்ந்த கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தமை. | பணிப்பாளர்கள் சபையின் அனுமதியுடன் தொழில்சார் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கான கோரிக்கை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு குறிப்பீடு செய்யப்பட்டுள்ளது.<br>இருப்பினும், இதுவரை முறையான அனுமதி எதுவும் வழங்கப்படவில்லை. எனினும், ஒரு பதில் வழங்கப்படும் என முகாமைத்துவத் திணைக்களம் தெரிவித்துள்ளது. |

| | | |
|---|---|---|
| 2.5 | **<u>போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்</u>**<br>(அ) 'சுவிட்ச் - ஏசியா' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து கிடைத்திருந்த 7,334,354 ரூபா தொகையில் 3,135,202 ரூபா, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது இந்த அதிகார சபையின் சகல ஊழியர்களுக்கும் தொழில் சார்ந்த கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தமை. சட்டமுறையற்ற விதத்தில் செலுத்தப்பட்ட இந்தக் கொடுப்பனவுகளை உரிய ஊழியர்களிடமிருந்து அல்லது பொறுப்புக் கூற வேண்டிய அதிகாரிகளிடமிருந்து அறவிடுமாறு அமைச்சின் செயலாளரினால் 2012 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 03 ஆம் விடுக்கப்பட்ட கட்டளை 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையும் செயப்படுத்தப்படாதிருந்தமை. | அமைச்சின் செயலாளர் மூலம் அனுமதியின் நிமித்தம் பல கடிதங்கள் திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளன. ஒரு விரிவான அறிக்கை 2017 நவம்பர் மாதம் 06 ஆம் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| | (ஆ) ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்ட புதிய பணிப்பாளர் நாயகத்திற்கு, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி இன்றி மாதாந்தம் 250,000 ரூபா தொகையான ஒரு சம்பளம் செலுத்தப்பட்டிருந்தாலும், இது வரை அந்தப் பதவிற்கு 98,215 ரூபா தொகை செலுத்தப்பட்டிருந்தமை. | பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்திற்கு அமைய சம்பளத்தை செலுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், இரண்டாவது தடவை நீட்டிப்புக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அனுமதி கோரப்பட்டுள்ளது. |
| 3.1.1 | **<u>செயற்பாட்டு மீளாய்வு சார்ந்த செயலாற்றுகை</u>**<br>(அ) 2003 ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆம் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க தொழில்முயற்சிகள் பற்றிய சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்தியிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஒரு கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காமை. | அதிகார சபை 2015 - 2025 ஆம் ஆண்டிற்கான 10 ஆண்டு திட்டத்தை தயாரித்துள்ளது.<br>01/2014 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் அதிகார சபைக்கு ஒரு கூட்டிணைந்த திட்டம் அவசியமில்லை என தீர்மானிக்கப்பட்டது. |
| | (ஆ) வருடாந்த செயல் திட்டத்தின் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டு மீளாய்வு ஆண்டு இறுதிற்கு ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்காமை. | 2017 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டு, உரிய அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையை அடிப்படையாகக் கொள்ளும் பொருட்டு, அந்த அறிக்கை அமைச்சின் மூலம் மத்திய வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| | (இ) இந்த அதிகார சபையினால் ஒரு மனித வளங்கள் அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காமை. | அதிகார சபையின் ஆட்சேர்ப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டவுடன், செயல்திறன் அடிப்படையிலான பயிற்சித் திட்டத்தையும் மனித வள அபிவிருத்தித் திட்டத்தையும் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| 3.1.2 | **<u>செயற்பாடுகளும் மீளாய்வும்</u>**<br>(அ) (i) 2008-2012 வரையான ஆண்டு காலப்பகுதிகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த உபகரணங்கள் பழுதுபார்க்கப்படாதிருந்த காரணத்தினால் இந்த அளவீட்டுக் கருவிகள் பயன்படுத்தப்பட்டு பெற்றுக் கொள்ளப்படும் தகவல்கள் தொடர்பான செவ்வைத் தன்மையிலும் மற்றும் தரத்திலும் திருப்தி கொள்ள முடியாதிருந்தமை. | குறைபாடுள்ள உபகரணங்களும் மற்றும் அளவுத்திருத்தம் செய்ய வேண்டிய உபகரணங்களும் இனங்காணப்பட்டுள்ளன. மேலும் குறைபாடுள்ள உபகரணங்களை பழுதுபார்ப்பது அந்தந்த உபகரணங்களின் முகவர்களால் செய்யப்பட வேண்டும். ஒருசில உபகரணங்களின் அளவுத்திருத்தம் வெளிநாட்டு நிறுவனங்களினால் மாத்திரம் செய்யப்பட வேண்டியுள்ளது. அதன் நிமித்தம் |

| | | |
|---|---|---|
| | | அதிக செலவுகளை செய்ய நேரிடும் என்பதால் அதற்கு பதிலாக அத்தகைய உபகரணங்களை புதிதாக கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. ஒருசில உபகரணங்கள் இலங்கை நியமங்கள் கட்டளைகள் நிறுவனத்தினால் அளவீடு செய்யப்பட்டு அவற்றின் செவ்வைத்தன்மை உறுதிசெய்யப்பட்டுள்ளது. |
| | (ii) இந்த உபகரணங்களில் 2017 ஆம் ஆண்டிற்கான பொருட்கள் கணக்கெடுப்பில் குறைபாடுடையவை என இனங்காணப்பட்டிருந்த உபகரணங்களை அகற்றுவதற்கு, பழுதுபார்ப்பதற்கு அல்லது புதிய உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை. | குறைபாடுள்ள உபகரணங்கள் 2017 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்டு, அவற்றை கொள்வனவு செய்வதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால் கொள்வனவில் ஏற்பட்ட தாமதத்தினால், 2017 ஆம் ஆண்டில் அவ்வாறு செய்ய முடியவில்லை. 2018 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்ட குறைபாடுள்ள உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. |
| | (iii) சக்தி அளவீட்டு உபகரணங்களை வாடகைக்கு கொடுக்கும் போது அறவிடப்படும் கட்டணங்களில் 2010 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை எந்தவிதமான திருத்தமும் மேற்கொள்ளப்பட்டிருக்காமை. | உபகரணங்களைப் பயன்படுத்தும் நிறுவனங்களுக்கு நியாயமான விலையில் அத்தகைய உபகரணங்கள் வழங்கப்படும். சக்தி வினைத்திறனை அதிகரிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டு இந்த சேவையை விரிவுபடுத்தி நாட்டின் சக்தி வினைத்திறனை மேம்படுத்த எமது அதிகார சபை செயல்பட்டு வருகின்றது. இந்தக் காரணிகளின் அடிப்படையில் பார்க்கும் போது, சக்தி அளவீட்டு கருவிகளை வாடகைக்கு விடுவது தொடர்பான கட்டணங்கள் 2010 ஆம் ஆண்டு முதல் திருத்தப்படவில்லை. |
| | (iv) சக்தி சார்ந்த சேவைகள் பிரிவினுள் இரண்டு உத்தியோகத்தர்கள் மட்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதால், சேவைகள் வழங்கல் மற்றும் உபகரணங்களை மீண்டும் பொறுப்பேற்றுக் கொள்ளல் முதலிய நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்கு கடினம் என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டமை. | திருத்தப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம், எதிர்காலத்தில் பதவியணிக்கு தேவையான ஊழியர்கள் நியமிக்கப்படவுள்ளனர். அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| | (ஆ) 03 சூரிய சக்தி உற்பத்திக் கருத் திட்டங்கள் மற்றும் 03 சூரிய சக்தி வினைத்திறன் மேம்பாட்டுக் கருத் திட்டங்கள் தொடர்பில் மொத்தம் 74.787 மில்லியன் ரூபா நிதி நிலைபெறுதகு சக்தி நிதியத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தாலும், 2017 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை 4 கருத் திட்டங்களின் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்காமையின் காரணமாக ஒட்டுமொத்த நிதியும் எஞ்சியிருந்தமையும் மற்றும் 2 கருத் திட்டங்கள் தொடர்பில் நூற்றுக்கு 0.2 முதல் 1 வரையான அளவில் மாத்திரம் ஒரு செயலாற்றுகை பதிவாகியிருந்தமையும் அவதானிக்கப்பட்டமை. | **<u>RE/03/01 - ஒரு ஸ்மார்ட் க்றிட் பற்றிய ஆய்வு</u>**<br>செயல்முறை ரீதியான விடயங்களை கருத்திற் கொள்கின்ற போது, இந்த இந்த முறைமை ஏற்கனவே காணப்படும் முறைமையை விட புதிய நிர்மாணத்தை அறிமுகப்படுத்த எளிதானது. ஆனால் தற்போதுள்ள கணனியுடன் கூடிய ஸ்மார்ட் க்றிட் முறைமையை தழுவுவது என்பது நடைமுறையில் ஒரு சிக்கலான விடயமாகும். ஆகையால், இது ஒரு முறையாக மேற்கொள்ள வேண்டிய ஒரு கருமமாக இனங்காணப்பட்டுள்ளது.<br><br>**<u>RE/08 - IFC சூரிய சக்திக் கருத் திட்டம்</u>**<br>IFC நிறுவனத்துடன் இணைந்து ஒரு குறுகிய காலப் பகுதியில் இந்தக் கருத் திட்டத்தின் பணிகள் மேற்கொள்ளப்பட்டாலும், IFC நிறுவனம் தனது ஆதரவை திடீரென நிறுத்தியதால் நாங்கள் ஒதுக்கிய பணத்தை குறித்த காலப் பகுதியில் எங்களால் செலவு செய்ய முடியவில்லை. |

| | | |
|---|---|---|
| | | **<u>RE/10 - அம்பாந்தோட்டை சூரிய சக்திப் பேட்டை</u>**<br>அம்பாந்தோட்டைப் பிரதேசத்தில் ஒரு மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி உற்பத்திப் பேட்டையை தாபிக்கும் நிமித்தம் நிதி ஒதுக்கப்பட்டிருந்தாலும், குறித்த காணி சக்தி உற்பத்திப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்தாலும், அம்பாந்தோட்டையின் நமித்தம் உருவாக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தின் அடிப்படையில், எமது கருத்திட்டங்கள் தொடர்பாக எம்மால் செயல்படுவதற்கு முடியவில்லை.<br><br>**<u>EM/05/02 - ஹோட்டல் துறையில் சக்திப் பாவனை வினைத்திறன் மேம்பாடு</u>**<br>சக்தி முகாமைத்துவப் பிரிவில் மிகக் குறைந்தளவான பொறியியலாளர்களும் மற்றும் ஏனைய ஊழியர்களும் பணியாற்றுவதால், ஏனைய பணிகள், கணக்காய்வு, ஆலோசனை மற்றும் விழிப்புணர்வு போன்ற விடயங்களில் ஈடுபடுத்தப்படுவதால், இந்த நிகழ்ச்சித் திட்டத்தை 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ள முடியவில்லை.<br><br>**<u>EM - 06 நியம தளர்த்தலூடான அபிவிருத்தி</u>**<br>இந்தக் கருத் திட்டத்திற்கு பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றது 2018 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதத்திலாகும். அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது 2018 ஆம் ஆண்டு மே மாதத்திலாகும். இந்தக் கரும விடயத்தை விரைவில் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>**<u>ST- 02 பரந்த எரிபொருள் நிரப்பு நிலைய மதிப்பாய்வு</u>**<br>இதன் மாதிரியை நிர்ணயிக்கும் நிமித்தம் 2016 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட சுமார் 186,000 முன்னோடி மதிப்பாய்வுத் தரவுகளை பகுப்பாய்வு செய்ய வேண்டியிருந்தது. இந்தப் பகுப்பாய்வு தொடர்பான பணிகளை 2017 ஆம் ஆண்டில் நிறைவு செய்ய முடிந்தது. அந்த ஆண்டில் மதிப்பாய்வை மேற்கொள்ள முடியவில்லை. எதிர்காலத்தில் குறித்த மதிப்பாய்வு நடத்தப்படவுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |
| 3.2 | <u>முகாமைத்துவ செயற்பாடுகள்</u><br>(அ) இந்த அதிகார சபைக்கு என தலைமை அலுவலகத்தை நிர்மாணிக்கும் நிமித்தம் குத்தகை அடிப்படையில் ஒரு காணித் துண்டு பெற்றுக் கொள்ளப்பட்டு, சட்டமுறையான ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளாமல் ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்ததால் 02 வருட காலத்தினுள் குறித்த அபிவிருத்திப் பணிகளை நிறைவு செய்ய இயலாது போனால் குத்தகைச் | நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெற வேண்டிய அனுமதியைப் பெற கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் கழிந்தன. இருப்பினும், நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் முகமாக 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அடிக்கல் நாட்டப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | சொத்தின் உரித்து குத்தகைக்காரருக்கு கிடைத்தல் வேண்டும் எனும் ஒரு நிபந்தனை உள்ளடக்கப்பட்டிருந்தமை. எனினும், 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையிலும் 2 1/2 வருடங்கள் கழிந்திருந்தும், குறித்த கட்டிடத்தின் வடிவமைப்பு நிர்மாணப் பணிகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டிருந்தமை. | |
| | (ஆ) சேவை காலம் 5 வருடங்கள் கழிந்து ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த ஒரு ஊழியருக்கு ஓய்வூதியப் பணிக்கொடையாக 160,090 ரூபா தொகை செலுத்தப்பட்டிருந்தாலும், அதன் நிமித்தம் வருடாந்த ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்காமை. | நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கையை கணக்கிடுவதன் மூலம் ஆண்டு ஓய்வூதிய பணிக்கொடையை அதிகார சபை கணக்கிடுகிறது. சேவையின் அவசியம் காரணமாக, இந்த அலுவலர்களின் சேவை தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு காணப்பட்டதை காரணமாகக் கொண்டு, இந்த அலுவலர்களுக்கு பணிக்கொடையை இந்த அதிகார சபையினால் செலுத்த நேர்ந்தது. |
| | (இ) நிலைபெறுதகு வலு அதிகார சபையின் ஆரம்பத்திலிருந்து ஊழியர்களின் சம்பளங்கள் பரிவர்த்தனை செய்யப்பட்ட போது ஏற்பட்டிருந்த தவறு தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணை அறிக்கைக்கு இணங்க, 2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆம் திகதி முதல் 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை, உரிய சுற்றறிக்கைகளுக்கு புறம்பாக மேலதிகமாக செலுத்தப்பட்ட 2,171,760 ரூபா தொகையான சம்பளங்களையும் மற்றும் கொடுப்பனவுகளையும் உரிய ஊழியர்களிடமிருந்து அறவிடுமாறு பிரதான பொறுப்புக் கூற வேண்டிய அமைச்சின் செயலாளரினால் கட்டளை விடுக்கப்பட்டிருந்தும், அதன்படி அறவிடுவதற்கு அல்லது சீர்செய்வதற்கு இந்த அதிகார சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை. | இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் ஆரம்பத்திலிருந்தே ஊழியர்களின் சம்பளத்தை பரிவர்த்தனை செய்த நேரத்தில் ஏற்பட்ட தவறுகள் பற்றி மேற்கொள்ளப்பட்ட விசாரணை தொடர்பான அறிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது என பணிப்பாளர்கள் சபை தீர்மானித்துள்ளது. புதிய ஒரு விசாரணைக் குழுவை நியமித்து அதன் சிபாரிசுகளின் அடிப்படையில் நடவடிக்கையை எடுக்க அதிகார சபையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. |
| | (ஈ) 2007ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28ஆம் திகதி செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் 18 மாதங்களுக்குள் ஒரேமாதிரியான மின்சாரத்தில் இயங்கக் கூடிய 03 வாகனங்களை தயாரிக்கும் நிமித்தம் 2007 ஆம் ஆண்டில் ஒரு வெளித் தரப்புக்கு 7,956,800 ரூபா செலுத்தப்பட்டிருந்தமை. எனினும், 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி வரைக்கும் ஒரு வாகனத்தையாவது தயாரிப்பதற்கு குறித்த தயாரிக்கும் தரப்பினால் முடிந்திருக்காமை. குறித்த அந்த 03 வாகனங்களையும் தயாரித்து பெற்றுக் கொள்வதற்கு அல்லது செலுத்தப்பட்ட நிதித் தொகையை மீளறவிடுவதற்கு சட்ட ரீதியில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காமை. | இந்தக் கருத் திட்டம் தொடர்பில் வெளித்தரப்பு தொடர்ந்தும் இந்தப் பணியை மேற்கொள்வதிலிருந்து விலகிச் செல்வதால் இந்தத் தரப்புக்கு எதிராக சட்ட நடவடிக்கையை எடுப்பதற்கு தேவையான ஒழுங்குகள் செய்யப் பட்டுள்ளன. சட்டமா அதிபரின் திணைக்களம் வழங்கிய அறிவுரைகளின் பிரகாரம் இது தொடர்பில் ஒரு நடுத் தீர்ப்பாளரின் சேவையை பெற்றுக் கொள்வதற்கு தேவையான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| | **<u>காற்று சக்தி அளவீட்டுக் கோபுரம்</u>**<br>(உ) 2012 ஆம் ஆண்டிற்கு முன்னர் தாபிக்கப்பட்ட 6 காற்று அளவீட்டுக் கோபுரங்களின் மூலமாக தரவுகள் சேகரிக்கப்பட்டிருந்தாலும், அத்தகைய தரவுகளைப் பிரயோகித்து காற்று சக்தி வள வரைபடங்களைத் தயாரிக்கும் பணி 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்காமை. | காற்று சக்தி வளங்கள் ஆய்வு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காற்று சக்தி வள வரைபடத்தைத் தயாரித்தல்<br>• முதலில் தரவுகளை சேகரித்தல்<br>• தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல்<br>• தரவுகளின் அளவுக்கு ஏற்ப அவற்றை ஒழுங்குபடுத்துதல்<br>• வரைபடங்களை தயாரிப்பது தொடர்பில் மென்பாகங்களுக்கு இணையாக தரவுகளை சேகரித்தல் |

| | | |
|---|---|---|
| | | முதலிய விடயங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதன் நிமித்தம் போதிய காலம் தேவைப்படும். போதிய காலத்தின் பின்னர், காற்று சக்தி வளங்கள் சாத்திய வரைபடங்களை தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் நிமித்தம் மேலும் 08-10 மாதங்கள் வரையான காலம் அவசியமாகும். |
| | (ஊ) 2010 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதிற்கு இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டிய 897,025,999 ரூபா தொகையை செலுத்தித் தீர்ப்பதற்கு எந்த ஒரு வேலைத் திட்டமும் இந்த அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்காமை. | மின்னுற்பத்தி இயக்குநர் தரப்புகளுக்கு மீளப்புதுப்பிக்கத்தகு சக்திமூலங்களைப் பயன்படுத்தி செலவு அடிப்படையிலான கட்டண முறையியல் கோட்பாட்டின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுக்கும் மற்றும் சாதாரண மின்னுற்பத்தி கலவையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்னுற்பத்தியின் செலவில் 90% வீதம் தவிர்க்கப்பட்ட செலவுக்கும் இடையில் காணப்படும் வித்தியாசத்தை இந்த தொகை குறிக்கும். இந்த தொகையை மின்சார நுகர்வோரிடமிருந்து அறவிடுவதற்கு இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு 2010 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொண்டுள்ளது. ஆகையால், இது தொடர்பில் மேலும் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியமில்லை என்பது எங்களது அபிப்பிராயமாகும். |
| **3.3** | **<u>செயலற்ற மற்றும் குறைபயன்பாடுடைய சொத்துக்கள்</u>**<br>(அ)சுவிட்ச் ஏசியா நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிடைத்து ஏஞ்சிய மீண்டும் செலுத்த வேண்டியிருந்த 4,548,176 ரூபா நிதித் தொகை, 2011 ஆம் ஆண்டு இரண்டு அரச வங்கிகுகளின் நடைமுறைக் கணக்கில் 4,548,176 ரூபா தொகைக்கும் மற்றும் சேமிப்புக் கணக்கில் 150,000,000 ரூபா தொகைக்கும் அதிகமான தொகை பல ஆண்டுகளாக வைப்புச் செய்யப்பட்டிருந்தமை. | சுவிட்ச் ஏசியா நிகழ்ச்சிம் திட்டத்தின் கீழ் கிடைத்து எஞ்சியிருக்கின்ற நிதி எந்தவொரு முதலீட்டு நோக்கத்திற்கும் இது வரை பயன்படுத்தப்படவில்லை. கோப் குழு தற்போது இந்த நிதி தொடர்பில் வினவி வருவது இந்த நிதி பயன்படுத்தப்படாமைக்கான காரணமாகும். |
| | (ஆ) இந்த அதிகார சபைக்கு சொந்தமான ஒரு கெப் வண்டியும் மற்றும் ஒரு மோட்டார் சைக்கிலும் 3 வருடங்களுக்கும் அதிக காலம் தொட்டு இயங்காதிருந்தமை. மேலே கூறப்பட்ட கெப் வண்டியை, லங்கா ஒட்டோ மொபைல் கம்பனியினால் 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையின் மூலம், அகற்ற சிபாரிசு செய்யப்பட்டிருந்தமை. எனினும், இந்த வாகனத்தை பழுதுபார்ப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி வரையிலும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை. குறித்த கெப் வண்டி திறந்த வெளியில் இருந்து இத்துப் போவது அவதானிக்கப்பட்டமை. | அந்த கெப் வண்டியை அகற்றும் நிமித்தம் 2018.02.27 ஆம் திகதி இந்த அதிகார சபையின் கொள்வனவுப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன் நிமித்தம் மூன்று பேர் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. குறித்த குழுவின் அறிக்கை கிடைத்தவுடன், இது தொடர்பில் மேல் நடவடிக்கை எடுக்கப்படும். |
| | (இ) மாற்றப்படுவதற்கான சிபாரிசின் அடிப்படையில் கழற்றி அகற்றப்பட்ட சாம்பூர் மற்றும் முல்லிபுரம் ஆகிய காற்று சக்தி அளவீட்டுக் கோபுரங்கள் எந்தவிதமான ஒரு ஒப்பந்தமும் செய்து கொள்ளப்படாமல் சேவை வழங்கும் தரப்பாகிய அசோக கன்ஸ்ட்ரக்ஷன் | கோபுரங்களின் பாகங்கள் எங்களது மேற்பார்வையின் கீழ் சேவை வழங்கும் தரப்பின் வளாகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு எந்தவிதமான கட்டணமும் செலுத்தப்படுவதில்லை. அகற்றப்பட்ட பல உபகரணங்களை மீண்டும் |

| | | |
|---|---|---|
| | எனும் கம்பனிக்கு சொந்தமான கெப்பெட்டிவலானவில் அமைந்திருக்கும் அதன் வளாகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தமை. அந்தக் கோபுரங்களிலிருந்து கழற்றி அகற்றப்பட்ட உபகரணங்கள் இந்த அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டமைக்கு எந்தவிதமான ஒரு ஆவணமும் இல்லாமல் சேவை வழங்கும் தரப்புக்கு நிதி விடுவிக்கப்பட்டிருந்தமை. கழற்றி அகற்றப்பட்ட சொத்துக்களையும் உபகரணங்களையும் மீண்டும் பாவனையில் ஈடுபடுத்துவதற்கு அல்லது பொருத்தமானவாறு நடவடிக்கை எடுப்பதற்கு 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை இந்த அதிகார சபை தவறியிருந்தமை. | பயன்படுத்த முடியாது. எனினும் அவை அதிகார சபைக்கு சொந்தகமாகவுள்ளன. |
| | (ஈ)நடுக்குடா காற்று சக்தி அளவீட்டுக் கோபுரத்தின் நிமித்தம் 2016 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 1,775,025 ரூபா பெறுமதியான உபகரணங்களில் 915,625 ரூபா பெறுமதியான உபகரணங்கள் 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரையிலும் பாவனையில் ஈடுபடுத்தப்பட்டிருக்காமை. ஏனைய உபகரணங்கள் ஏறக்குறைய 11 மாதங்கள் தாமதமாகி நிறுவப்பட்டிருந்தமை. | இந்த உபகரணங்களை வெளிநாடுகளிலிருந்து கொள்வனவு செய்ய நேர்ந்துள்ளதால், காலம் கழிந்துள்ளது. அத்தியாவசிய உபகரணங்களாக 915,625 ரூபா பெறுமதியான உபகரணங்கள் நடுக்குடா காற்றாலை கோபுரத்தில் நிறுவப்பட்டுள்ளன. ஏனைய உபகரணங்கள் தேவையின் அடிப்படையில் நிறுவும் நிமித்தம் அதிகார சபையின் வசமிருக்கின்றன. |
| **3.4** | **<u>பதவியணி நிருவாகம்</u>**<br>(அ) இந்த அதிகார சபைக்கு அனுமதிக்கப்பட்ட ஒரு ஆட்சேர்ப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு அது அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருக்காமை. | ஆட்சேர்ப்புத் திட்டம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அதன் அங்கீகாரத்தின் நிமித்தம் அனுப்பப்பட்டுள்ளது. இது தற்போது திருத்தப்பட்டு வருகிறது. |
| | (ஆ) இந்த அதிகார சபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி 136. இதில் 2017 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதிற்கு காணப்பட்ட உண்மையான ஆளணி 103. அதன்படி பார்க்கும் போது 33 வெற்றிடங்கள் நிலவியமை. இந்த வெற்றிடங்களில் 3 பணிப்பாளர் பதவிகளும், 4 பகுதித் தலைவர் பதவிகளும் மற்றும் 12 முகாமைத்துவ உதவியாளர் பதவிகளும் என உள்ளடங்கியிருந்தமை. | அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டம் இல்லாததால் இந்த அதிகார சபையின் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. புதிய ஆட்சேர்ப்புத் திட்டம் பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அதன் அனுமதியின் நிமித்தம் அனுப்பிவைக்கப்படும். |
| | (இ) மேலே கூறப்பட்டது போல் வெற்றிடம் நிலவிய மூன்று பணிப்பாளர் பதவிகளிலும் மற்றும் 4 பகுதித் தலைவர் பதவிகளிலும் 3 பதவிகளுக்கு இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசின் தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக உரிய பதவிகளின் நியமன அதிகாரியாகிய பணிப்பாளர்கள் சபையின் அனுமதியின்றி இந்த அதிகார சபையின் தலைவரினால் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் பதில் கடமைப் பதவிகளுக்கு என நியமனங்கள் செய்யப்பட்டிருந்தமை. 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை பதில் கடமைகளுக்கான கொடுப்பனவுகளாக 2,903,361 ரூபா தொகை செலுத்தப்பட்டிருந்தமை. | உதவிச் சேவைப் பிரிவுத் தலைவர், பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகப் பிரிவுக்கு பொறுப்பாக தொழிற்படுபவர்) மற்றும் பணிப்பாளர் நாயகம் ஆகியோரின் சிபாரிசுகளுடன் பணிப்பாளர்கள் சபையின் தலைவரினால் இந்த நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன. அனுமதிக்கத்தகு ஆட்சேர்ப்புத் திட்டம் எதுவும் அங்கீகரிக்கப்படாத நிலையில் நிரந்தர நியமனங்களை வழங்க முடியாது என்பதால், பதில் கடமை நியமனங்கள் நீட்டிக்கப்பட்டுள்ளன. அதன்படி, இந்த அதிகார சபையின் ஆட்சேர்ப்புத் திட்டம் இன்னும் அங்கீகரிக்கப்படாததால், அந்த பதில் கடமை நியமனங்களை நிரந்தமாக்குவதற்கான வாய்ப்புகளில்லை. |
| | (ஈ) மேலும் பணிப்பாளர்கள் சபையின் அனுமதியின்றி இந்த அதிகார சபையின் 06 பதில் பதவிகளுக்கு 2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை எரிபொருள் கொடுப்பனவாக 2,610,880 ரூபா தொகையும், 3 | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களின்படி, பதில் கடமை நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள அதிகாரிகள் தேவையான தகைமைகளை பூர்த்தி |

| | | |
|---|---|---|
| | பகுதித் தலைவர் பதவிகளில் பணிப்பாளர் ஒருவருக்கு போக்குவரத்து கொடுப்பனவாக 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை 4,210,000 ரூபா தொகையும் செலுத்தப்பட்டிருந்தமை. | செய்துள்ளதால், ஆட்சேர்ப்புத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டவுடன், ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு இணங்க, நிரந்தர நியமனங்களை வழங்கி, பதில் கடமைகளுக்கான கொடுப்பனவை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், பதில் கடமைக்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகளில் மூன்று பேர் HM - 1-1 சம்பளக் குறியீட்டு வகுதியில் உள்ளடங்குகின்றனர். ஆகையால், அவர்களுக்கு 2015/05/25 ஆம் திகதியிலிருந்து, PED/1/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகபூர்வ வாகனங்கள் ஒதுக்கப்பட்டு, எரிபொருள் கொடுப்பனவுகளும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அதன்படி, பதில் கடமை அடிப்படையில் வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருப்பது இரண்டு உத்தியோகத்தர்களுக்கு மட்டுமே. |
| | (உ) காற்று சக்தி அளவீட்டுக் கோபுரங்களைப் பேணிப் பராமரித்தல், குறித்த அளவீட்டுக் கோபுரங்களின் மூலமாக தரவுகளை சேகரித்தல், மென்பாகங்களின் மூலமாக தரவுகளை தயாரித்தல் மற்றும் கோவைகளைப் பேணிச் செல்லல் போன்ற சகல கருமங்களும் 2017 ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்தே ஒரு தொழில் நுட்ப உத்தியோகத்தருக்கு மாத்திரம் மட்டுப்பட்டிருந்ததால், 2017 ஆம் ஆண்டிற்கு அடைவதற்கு என இலக்குக் கொள்ளப்பட்டிருந்த இலக்கை அடைந்து கொள்வதற்கு தவறியிருந்தமை. அது எதிர்காலத்தில் செயலாற்றுகை மீது பாதகமான தாக்கங்களைக் கொண்டிருக்கும் என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டமை. | 2017 ஆம் ஆண்டின் தரவுகள் சதவீதமாக தரவுகளை சேகரித்துத் தயாரிப்பதற்கு போதியளவு காலம் தேவை. இந்தக் கரும பணியை நிறைவேற்ற போதுமான ஊழியர்கள் இல்லை. மேலும் இந்த அதிகார சபையின் ஆட்சேர்ப்புத் திட்டம் 2016 முதல் தயாரிக்கப்பட்டு வருவதால் இந்த செயல்முறைக்கு மனிதவளத்தை பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்புகள் இல்லை. |
| **4**<br>**4.1** | ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலையான அபிவிருத்தி இலக்குகள் உரிய பொறுப்பேற்கக் கூடிய மற்றும் தூய சக்தி விநியோகம் தொடர்பான '2030' நிகழ்ச்சி நிரலுக்கு இணங்க குறித்த இலக்கு இனங்காணப்படாமை மற்றும் அந்த இலக்கை அடைந்து கொள்ளல் ஆகியவற்றுக்கு இடையில் நிலவும் வித்தியாசங்களும் மற்றும் முன்னேற்றமும் பொருத்தமான தகவுதிறன் செயல் திட்டத்தினூடாக இனங்காணப்படாதிருந்தமை. | ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் சக்திப் பாதுகாப்பு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்தி ஆகிய இரண்டும் முக்கியமானவையாகும். இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை (இ.நி.வ.அ.ச.) செயற்படுத்தும் ஒட்டு மொத்தக் கருத் திட்டங்களும் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களும், அந்த இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கும் வகையில் மேற்கொள்ளப்படுவதால், இந்த அதிகார சபையினால் மேற்கொள்ளப்படும் சகல நிகழ்ச்சித் திட்டங்களும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு பங்களிக்கும். |
| **5.1** | (அ) இந்த அதிகார சபையின் செயல் திட்டத்தைத் தயாரித்த நேரத்தில் அதிகார சபையின் தேவைப்பாடுகளை விஞ்சி மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டமை. | நிறுவனத்தின் செயல் திட்டத்தின்படி பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டது. திட்டத்தை செயல்படுத்த தேவையான ஏனைய காரணிகளின் பற்றாக்குறையினால் முழுமையாக செயற்படுத்த முடியவில்லை. ஆகையால், இந்தக் குறைபாடு நிகழ்ந்துள்ளது. இந்த நிலைமையை கருத்திற் கொண்டு குறித்த திட்டத்தைத் தயாரிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |

| | | |
|---|---|---|
| | (ஆ) பெறுகைத் திட்டங்கள் தயரிக்கப்பட்ட நேரத்தில் கால வரையறைகள் இனங்காணப்பட்டிருந்தாலும், அந்தக் கால வரையறைகளினுள் உரிய முறையில் கொள்வனவு விடயங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்காமை. | தேவையான எண்ணிக்கையிலான ஊழியர்களை இந்த அதிகார சபையின் முழு ஆற்றலும் உள்ளடங்கும் வகையில் ஆட்சேர்ப்பு செய்ய முடியாது போயுள்ளது. நிகழ்ச்சித் திட்டங்களை சரியான நேரத்தில் செயல்படுத்துவதில் கடுமையான சிக்கல்கள் எழுந்துள்ளன. ஆட்சேர்ப்புத் திட்டம் அனுமதிக்கப்பட்டவுடன், ஊழியர்களின் எண்ணிக்கை போதுமான அளவு அதிகரிக்கப்படும் என்பதால், இந்த நிலை சரியாகும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |
| | (இ) 2017 ஆம் ஆண்டின் பெறுகைத் திட்டத்திற்கு இணங்க, 50 வகையான விநியோகங்களை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தாலும், அவற்றில் 6 வகையான விநியோகங்கள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தமை. | இந்த அதிகார சபை பல துறைகளினூடாக சேவைகளை வழங்குவதால், அது பல முகவர் நிலையங்கள், அமைச்சுகள் மற்றும் பிற தரப்புகள் என்பவற்றினால் அதற்கு குறிப்பீடு செய்யப்படும் நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்த செயற்பாடுகளை அடுத்த ஆண்டு வரமுன்னர் வருடாந்தத் திட்டத்தில் அல்லது பெறுகைத் திட்டத்தில் சேர்ப்பது கடினம். எதிர்காலத்தில் இந்த வெளிப்புற நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |
| **6** | **<u>முறைமகளும் கட்டுப்பாடுகளும்</u>**<br>(ஆ) கீழ்காணும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பிரிவுகளில் விஷேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.<br>கணக்கீடு, நிதிக் கட்டுப்பாடு, கடன் கட்டுப்பாடு, மனித வளங்கள் முகாமை, கருத் திட்டங்களின் செயற்படுத்துகை, சொத்துக்களின் முகாமைத்துவம், தரவு முறைமைகள் முகாமைத்துவம், வாகனங்கள் கட்டுப்பாடு என்பன அத்தகைய பிரிவுகளாகும். | கணக்காய்வாளர் அதிபதியினால் சுட்டிக் காட்டப் பட்டுள்ள பிரிவுகளில் விஷேட கவனத்தைச் செலுத்தி, குறித்த பலவீனங்களை இனங்கண்டு அவற்றை சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

**<u>கணக்காய்வு விசாரணை அறிக்கைகளிலும் மற்றும் கணக்காய்வு அறிக்கைகளிலும் சுட்டிக் காட்டப் பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையினால் மேற்கொள்ளப் பட்டுள்ள நடவடிக்கைகள் - கணக்காய்வாளர் அதிபதியின் 2019.06.28 ஆம் திகதிய கணக்காய்வு அறிக்கை</u>**

| கணக்காய்வு குறிப்பு இலக்கம் | 2017 கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | அத்தகைய விடயங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் |
|---|---|---|
| **2.2.1** | **<u>நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்தல்</u>**<br>குறித்த மீளாய்வு ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்படாதிருந்தமை. | இது முக்கியமாக இந்த அதிகார சபையினது ஊழியர்களின் பற்றாக்குறையால் நிகழ்ந்த ஒரு நிகழ்வாகும். நிதிப் பிரிவில் தலைவர் ஒருவர் இல்லாதிருந்தமை இதற்கு பிரதான காரணமாகும். பொருத்தமான அங்கீகாரத்துடன் கூடிய நிதிக் கூற்றுக்கள் 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 17 ஆம் திகதி கணக்காய்வாளர் அதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளன. |
| **2.2.2** | முழுமையாக தேய்மானம் கழிக்கப்பட்டாலும், மேலும் பயன்படுத்தக் கூடிய சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பன தொடர்பில் வெளிப்படுத்தல்கள் செய்யப்படாதிருந்தமை. அது மதிப்பீட்டில் ஒரு தவறாக இருந்தால், அதனை சீராக்கி, சொத்துக்கள் மீள்விலை மதிக்கப்பட்டிருக்காமை. | 07 ஆம் இலக்க இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம், முழுமையாக தேய்மானம் ஏற்பாடு செய்யப்பட்ட, ஆனாலும் இன்னும் பயன்படுத்தக் கூடிய சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் சராசரிப் பெறுமானம் கணிப்பிடப்பட்டு வருகின்றது. மேலும் இதனை 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| **2.2.3** | (அ) (i) காணியை குத்தகைக்கு பெறுவது தொடர்பாக சக்தி நிதியத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட 47,000,000 ரூபா தொகை மிகைக் கட்டண வருமதியாக இனங்காணப்பட்டு 2015 ஆம் ஆண்டின் நிதி சார்ந்த செயலாற்றுகைக் கூற்றில் கணக்கீடு செய்யப்பட்டிருந்த காரணத்தினால் அந்த ஆண்டின் மிகை 47,000,000 ரூபாவால் மிகைத்துக் கணக்குக் காட்டப்படிருந்தமை. | 2015 ஆம் ஆண்டின் அதிக மதிப்பீடு செய்யப்பட்ட நிதிப் பெறுபேறு பெறுமானமாகிய 47,000,000 ரூபா தொகையை, உரிய விதத்தில் திணிவுப் பெறுமான வித்தியாசங்கள் கூற்றினூடாக அடுத்த நிதி சார்ந்த செயலாற்றுகைக் கூற்றில் சீராக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| | (ii) கட்புலனாகு சொத்துக்களைக் கொள்வனவு செய்வது தொடர்பாக செலவு செய்யப்பட்ட 8,345,683 ரூபா தொகைக்கு பதிலாக 9,242,483 ரூபா தொகை கழிக்கப்பட்டு, எஞ்சிய 41,247,949 ரூபா தொகை நிதி சார்ந்த செயலாற்றுகைக்கு வரவுவைக்கப்பட்ட காரணத்தினால், 896,800 ரூபா குறைவாக நிதி சார்ந்த செயலாற்றுகை அறிக்கையில் வரவுவைக்கப்பட்டுப் பதிவாகியிருந்தமை. ஆகையால், 2016 ஆம் ஆண்டின் மிகை அந்தப் பெறுமானத்தினால் குறைவாக கணக்குக் காட்டப்பட்டிருந்தமை. அது மீளாய்வு ஆண்டிலும் சீராக்கப்படாதிருந்தமை. | 2018 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் அந்தத் தவறை சீராக்குவதற்கு தேவையான நடவடிக்கையை எடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது. |
| | (இ) ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் கட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் ஒரு கருத் திட்டத்திற்கு என விடுவிக்கப்பட்ட 51,800,357 ரூபா தொகையான கடன், அறவிடுவதற்கான அதிகாரம் இந்த அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருக்காத நிலையில், அதிகார சபையினால் பெற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கடனாக நடைமுறையல்லாத பொறுப்புக்களின் கீழ் நிதி நிலைக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தமை. | இந்தக் கருத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களை 2018 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களிலிருந்து பதிவழிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

| | | |
|---|---|---|
| | (உ) ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற கருத் திட்டங்களுக்கு தனியான கருத் திட்டக் கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்தாலும், உரிய வருமானமும் மற்றும் செலவினமும் இந்த அதிகாரசபையின் வருமானக் கூற்றில் கணக்குக் காட்டப்படாதிருந்தமை. | கணக்காய்வாளர் அதிபதி சுட்டிக்காட்டியபடி கருத் திட்டங்கள் தொடர்பான வருமானம் மற்றும் செலவுகள் ஆகியவற்றை வருமானக் கூற்றிலிருந்து நீக்குவதற்கு தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| | (ஊ) மீளாய்வு ஆண்டிற்கான தேய்மான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்ட போது, இந்த அதிகார சபையின் தேய்மானக் கொள்கைகளுக்கு புறம்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை. | 2017 ஆம் ஆண்டிற்கான தேய்மானம் ஏற்பாடு செய்யப்பட்ட போது, முழு ஆண்டிலும் பெற்றுக் கொள்ளப்பட்ட தேய்மான ஏற்பாடு செய்யப்பட வேண்டிய சொத்துக்கள் தொடர்பான தகவல்களைப் பெறுவதிலுள்ள சிரமத்தின் காரணமாக, முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் இனங்காணப்பட்ட தேய்மான ஏற்பாட்டு விதிகளின் அடிப்படையில் தேய்மானம் கணக்கிடப்பட்டது. இந்த அதிகார சபையின் சொத்துக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்தும் பணி மேற்கொள்ளப்படுவதால், இது 2019 ஆண்டிற்குள் படிப்படியாக இயல்புநிலையை அடையும். |
| | (எ) சக்தி நிதியத்திற்கும் மற்றும் பிணையுத்தரவாத நிதியத்திற்கும் வரவுவைக்க வேண்டிய வருமானமும் மற்றும் வட்டியும் நிதி சார்ந்த செயலாற்றுகைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டதால், மிகை 37,504,984 ரூபா தொகையால் மிகைத்துக் காட்டப்பட்டிருந்தமை. | அந்த இனங்காணப்பட்ட தொகை சரியாக, பெறுமானத் திணிவு வித்தியாசங்கள் கூற்றினூடாக சக்திப் பாதுகாப்பு நிதியம் மற்றும் பிணையுத்தரவாத நிதியம் என்பவற்றுக்கு வரவுவைக்கப்பட்டுள்ளது. சரியான முறையில் வட்டி வருமானம் ஏனைய வருமானங்களின் கீழ் இந்த அதிகார சபையின் வருமானக் கூற்றில்/நிதி சார்ந்த செயலாற்றுகைக் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டியதாகும். |
| **2.3** | <u>**தெளிவுபடுத்தப்படாத வித்தியாசங்கள்**</u><br>பிணையுத்தரதவாத நிதியத்தின் 2017 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதிற்கான நிலுவைக்கும் மற்றும் அந்தத் திகதிற்கான முதலீட்டு நிலுவைக்கும் இடையில் 372,333 ரூபா தெளிவுபடுத்தப்படாத ஒரு வித்தியாசம் அவதானிக்கப்பட்டமை. | கணக்காய்வு அறிக்கையில் தெளிவுபடுத்தப்படாத வித்தியாசங்களின் கீழ் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பிணையுத்தரவாத நிதியத்தின் நிலுவைக்கும் மற்றும் முதலீட்டு நிலுவைக்கும் இடையில் காணப்படும் 372,333.00 ரூபா வித்தியாசத்தை 2018 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சீராக்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| **2.4** | <u>**கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**</u><br>(அ) வலயக் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு 2016 ஆம் ஆண்டில் 13,348,087 ரூபா தொகையான முற்பணம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தமை. எனினும் 6,882,412 ரூபா முற்பணத் தொகையை 2017 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை. | இந்த முற்பணத் தொகைகளை தீர்ப்பனவு செய்யுமாறு கோரி உரிய நிறுவனங்களுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. |
| | (ஆ) ஏனைய கொடுப்பனவுகள் மற்றும் திரண்ட செலவினங்கள் தொடர்பான கணக்குகளில் நீண்டகாலமாக முன்கொணரப்பட்டு வருகின்ற நிதித் தொகையை தீர்ப்பனவு செய்ய அல்லது பொருத்தமான பிற நடவடிக்கையை எடுக்க இந்த அதிகார சபையினால் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமை. | 5 வருடங்களுக்கு அதிக காலம் தொட்டு இருந்து வருகின்ற ஏனைய கொடுப்பனவுகள் மற்றும் திரண்ட செலவினம் என்பன தொடர்பில் விநியோகத் தரப்புகளுக்கு இணக்கல் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அந்த நிதித் தொகைகளை தீர்ப்பனவு செய்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| **2.5** | <u>**சட்டதிட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் ஒவ்வாமை**</u> | திறைசேரியினது சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு வருகின்றது. |

| | | |
|---|---|---|
| | (அ) (i) நிலையான சொத்துக்கள் தொடர்பான புத்தகங்கள் முறையாக பேணப்பட்டு இற்றைப்படுத்தப்படாதிருந்தமை. | |
| | (ii) உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி, துணைப்பாகங்கள் மற்றும் மென்பாகங்கள் என்பன தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்காமை. | கணனிகள், துணைப்பாகங்கள் மற்றும் மென்பாகங்கள் என்பன தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டு வருகின்றது. |
| | (ஆ) நிதிக் கூற்றுக்கள் அடங்கலாக வருடாந்த நகல் அறிக்கை கணக்காய்வாளர் அதிபதிற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்தமை. | 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் அடங்கலாக வருடாந்த நகல் அறிக்கைகள் கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இந்தத் தவறை நிவர்த்தி செய்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |
| **3.1** | <u>**நிதி சார்ந்த செயலாற்றுகை**</u><br>குறித்த மீளாய்வு ஆண்டிற்கு இந்த அதிகார சபையின் நிதிப் பெறுபேறு 51,702,295 ரூபா மிகையாக காணப்பட்டமை. அதற்கு இணையாக முன்னைய ஆண்டின் அத்தகைய மிகை 6,463,693 ரூபாவாக காணப்பட்டதால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது குறித்த மீளாய்வு ஆண்டின் நிதிப் பெறுபேறு 45,238,602 ரூபா தொகையால் அதிகரித்திருந்தது அவதானிக்கப்பட்டமை. இந்த அறிக்கையின் 2.1.3(ஆ) குறிப்பிடப்பட்டுள்ள மொத்தப் பெறுமானம் 37,504,984 ரூபாவாக காணப்பட்டமை. தவறான கணக்கீடு இவ்வாறு நிதிப் பெறுபேற்றில் ஒரு அதிகரிப்பு காணப்படுவதற்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது அவதானிக்கப்பட்டமை. | குறித்த மீளாய்வு ஆண்டின் நிதிக் கூற்றுக்களுக்கு வட்டி வருமானமாக 37,504,984 ரூபா தொகை நிதி சார்ந்த செயலாற்றுகைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது. சரியான முறையில் வட்டி வருமானம் ஏனைய வருமானங்களின் கீழ் இந்த அதிகார சபையின் வருமான அளவு நிதி சார் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனெனில், அது இந்த அதிகார சபையின் செயற்பாடுகளினூடாக இந்த அதிகார சபைக்கு குறித்த ஆண்டு காலப் பகுதியில் கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் என்பதாலாகும். |
| **4** | <u>**செயற்பாடு சார்ந்த மீளாய்வு**</u><br>தற்பொழுது நிகழ்ந்து வருகின்ற முறையியலின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள 10 செயற்பாடுகளில் 15,948,876 ரூபா பெறுமதியான 8 செயற்பாடுகள் பல வருடங்களாக செயற்படுத்தப்படாதிருந்தமையும் மற்றும் அதன் நிமித்தம் 2017 ஆம் ஆண்டிலும் எந்தவிதமான செலவு செய்யப்படாதிருந்தமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டமை. | குறித்த 8 கருத் திட்டங்களில் 5 கருத் திட்டங்கள் ஏற்கெனவே நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| **5** | <u>**பாதீட்டுக் கட்டுப்பாடு**</u><br>வரவுசெலவுத்திட்ட ஆவணம் பயனுள்ள முகாமைத்துவ கருவி சாதனமாக பயன்படுத்தப்படாதிருந்தது அவதானிக்கப்பட்டமை. | கணக்காய்வாளர் அதிபதியினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளவாறு, வரவுசெலவுத்திட்ட ஆவணத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு நிதிக் கட்டுப்பாட்டு முறைமையை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான ஒரு முறையியலைத் தயாரித்து 2019 ஆம் ஆண்டு முதல் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| **6** | <u>**முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**</u><br>கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டு, முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு ஆகிய பிரிவுகளில் விஷேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். | கணக்காய்வாளர் அதிபதியினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பிரிவுகளில் விஷேட கவனத்தைச் செலுத்தி, அவற்றை, உரிய இலக்குகளை அடைந்து கொள்ளும் பொருட்டு குறிப்பீடு செய்வதற்கும் மற்றும் உரிய பலவீனங்களை இனங்கண்டு அவற்றை சீராக்குவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். இதில் குறிப்பிடப்பட்டுள்ள கணனி பேரேட்டு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டிலிருந்து இந்த முறைமையினூடாக கணக்கீட்டுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும். |

## 03. அதிகார சபையின் செயலாற்றுகையை மேம்படுத்துவதன் நிமித்தம் மேற்கொள்வதற்கு உத்தேச நடுத்தர கால நடவடிக்கைகள் பற்றிய ஒரு சாரம்சம்

### 03.1. மின்சக்திக்கான அனுமதிப் பத்திரங்களை விநியோகிக்கும் முறையை இலகுபடுத்த பூகோளத் தரவுகள் முறைமையை இற்றைப்படுத்துதல்.

இலங்கையிலுள்ள மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்கள் தோன்றும் இடங்கள், காலப் பகுதி மற்றும் அவற்றின் அளவு என்பவற்றை அளவிட்டு அபிவிருத்தித் தரப்புகளுக்கு முதலிடும் வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுப்பது இந்த அதிகார சபையின் முக்கிய குறிக்கோளாகும் .இது வரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள அத்தகைய சகல தரவுகளும் மற்றும் தகவல்களும் பொதுமக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக வலைமைப்பினூடாக பெற்றுக் கொள்ளக் கூடிய பூகோளத் தரவு முறைமையினுள் உள்ளீர்க்கப்பட்டுள்ளன.

### 03.2. சக்தி அபிவிருத்திப் பிரதேசங்களைப் பிரகடனப்படுத்துதல்

இலங்கையில் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்கள் பல பகுதிகளில் காணப் பட்டாலும் கூட அந்த ஒவ்வொரு பகுதியையும் அபிவிருத்தி செய்ய முடியாது .ஏனைய பிற நிலப் பாவனை விடயங்களும் இதற்குக் காரணமாகும் .சக்தி அபிவிருத்திப் பிரதேசங்களைப் பிரகடனப்படுத்துவதனூடாக ஏனைய நிலப் பாவனை அம்சங்கள் பாதிக்கப்படாத வகையில் காணித் துண்டுகளை மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்திற்குப் பயன்படுத்தக் கூடிய வாய்ப்பு கிடைக்கும்.

### 03.3. இலங்கையினுள் சக்திப் பாவனைத் தரவுகளைப் பிரகடனப்படுத்துதல்

1971 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்பட்டு வருகின்ற பல சக்தி மூலங்கள் தொடர்பான அனைத்துத் தரவுகளையும் மற்றும் தகவல்களையும் சேகரித்துத் தயாரிக்கப்பட்ட ஆவணம் தேசிய சக்திக் கணக்காய்வு என அல்லது சக்திச் சமநிலை என அழைக்கப்படுகின்றது. 1990 ஆம் ஆண்டுகள் முதல் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை இந்த நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது. இது வரை, இந்த வருடத்தில் சக்திப் பாவனை தொடர்பான அந்த ஆவணம் இன்டர்நெட்டுடன் இணைந்த தரவுகளை களஞ்சியமாகவும் அதே போன்று அச்சீட்டு வெளியீடாகவும் ஒரு வருட காலத்தினுள் வெளியிடுவதற்கு அதிகார சபையினால் இயன்றுள்ளது.

### 03.4. காற்று மற்றும் சூரிய சக்தி ஆகிய சக்திகளை அளவிட்டு, அபிவிருத்தி செய்யக் கூடிய பிரதேசங்களை அதனூடாக இனங்காணுதல்

இலங்கையிலுள்ள முக்கிய மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மூலங்களாக சூரிய சக்தியும் மற்றும் காற்று சக்தியும் இனங்காணப்பட்டிருந்தாலும், அந்த சக்தி மூலங்களின் ஏற்றத்தாழ்வுகள் மற்றும் கால வித்தியாசங்கள் என்பவற்றை அறிந்து கொள்ளாமல் அத்தகைய வளங்களை அபிவிருத்தி செய்வது என்பது கடினமான ஒரு விடயமாகும் . ஆகையால், இந்த வளங்களின் வடிவங்களை அளவிடும் பொருட்டு நாடு முழுதிலும் ஒரு பரந்த நீண்டகாலக் கோபுர வலையமைப்பை நிறுவி அபிவிருத்தித் தரப்புகளுக்கு அந்தத் தரவுகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### 03.5. மின்சக்தியை நுகரரும் உபகரணங்களுக்கு சக்தி முத்திரையிடலை அறிமுகப்படுத்துவது பற்றிய தேவையான ஒழுங்குவிதிகளை விதித்தல்

ஏதாவதொரு மின் உபகரணத்தின் வினைத் திறன் மற்றும் நியமம் ஆகியன தொடர்பான சிக்கல்களை நுகர்வோருக்கு இலகுவில் அறிந்து கொள்ளும் வகையில் சக்தி முத்திரையிடல் CFL மின் குமிழ்களுக்காக அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. கூரை மின்விசிறி, இரட்டை சரிபடுத்தியுடைய குழாய் வடிவ மின் குமிழ்கள் மற்றும் சமப்படுத்தி மின் குமிழ்கள் என்பவற்றுக்கு அந்த சக்தி முத்திரையிடலை அறிமுகப்படுத்தத் தேவையான பூர்வாங்க நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

### 03.6. மின்சாரத்தை நுகர்கின்ற உபகரணங்களின் சக்தி வினைத் திறனை அளவிடுவதற்கான ஒரு ஆய்வு கூடத்தைத் தாபித்தல்

அதிகளவில் பயன்படுத்தப்படுகின்ற மின்னுபகரணங்களின் வினைத் திறன் மற்றும் ஏனைய நியமங்கள் என்பவற்றை அறிந்து கொள்ளும் வகையில் பல பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு பல ஆய்வு கூடங்கள் நிர்மாணிக்கப் பட்டுள்ளன .இந்த ஆய்வு கூடங்கள் பல்கலைக்கழகங்கள், அரச நிறுவனங்கள் என்பவற்றை அண்மித்து இயங்குகின்றன.

### 03.7. சக்தி முகாமையாளர்களுக்கும், சக்தி கணக்காய்வாளர்களுக்கும் பயிற்சி அளித்தல்

அதிகார சபையின் சட்ட சட்டஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் பொருட்டு தேவையான தொழில் நுட்ப சேவைகளை வழங்குவதற்கு அந்தத் தொழில்

தேர்ச்சியாளர்கள் பலரின் சேவையை இலங்கைக்குப் பெற்றுக் கொடுக்கும் முகமாக இந்தப் பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**03.8. பட்டய சக்திக் கணக்காய்வாளர்களை நியமிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்**

மின்சாரத்தை நுகர்கின்ற நிறுவனங்களை கட்டாயம் சக்திக் கணக்காய்வுக்கு உட்படுத்துவதற்கு, தற்போதுள்ள சட்ட ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்த இந்தப் பட்டய சக்திக் கணக்காய்வாளர்கள் பலரின் சேவை அவசியம். எனவே, குழுக்களாக அவர்களுக்கு தொடர்ந்தும் பயிற்சியளிக்கப்படுகின்றது.

**03.9. தொழில் நுட்ப மட்ட ஆய்வுக்கான மாற்றுவழி சக்திப் பாடவிதானத்தைத் தயாரித்தல்**

மின்சக்தி தொடர்பான அறிவுடைய ஒரு தேசத்தைக் கட்டியெழுப்பும் போது நிலைபெறுதகு சக்தி வளங்கள் மற்றும் அத்தகைய வளங்களின் பாவனை தொடர்பில் எதிர்கால சந்ததியினரை அறிவு வாயந்தவர்களாக மாற்றுவது இதன் நோக்கமாகும்.

**03.10. பாடசாலைப் பாடவிதானத்திற்கு சக்திப் பாடத்தை அறிமுகப்படுத்துதல் மற்றும் பாடசாலைச் சக்திக் குழுக்களைத் தாபித்தல்**

இது, மின்சக்திப் பாவனை தொடர்பில் காணப்படுகின்ற சிக்கல் வாய்ந்த விடயங்களை அறிந்து கொள்வதற்கும் அதே நேரம் செயன்முறை ரீதியான அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் மாணவர்களைப் பரிட்சயப் படுத்தும் ஒரு நிகழ்ச்சித் திட்டமாகும்.

**03.11. பல்கலைக்கழங்களிலும் மற்றும் ஆராய்ச்சி நிறுவகங்களிலும் மின்சக்தி தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு உதவுதல்**

இலங்கையில் காணப்படும் பல்கலைக்கழகங்கள், கல்வி சார் நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி சார்ந்த நிறுவனங்கள் என்பவற்றை மின்சக்தி தொடர்பான ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுத்துதல் மற்றும் கள ரீதியில் தேசிய முக்கியத்துவத்தின் நிமித்தம் அத்தகைய நிறுவனங்களை ஆயத்தப் படுத்துதல் இதன் நோக்கமாகும்.

**03.12. சிறிய கைத்தொழில்களின் நிலையை மேம்படுத்தும் பொருட்டு சக்தி மைய மேம்பாட்டு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துதல்**

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியினது முக்கியமான உபாயமாக கருதப்படும் சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களின் உற்பத்தித் திறன் பற்றிய மனோபாவத்தை மாற்றுவது இதன் நோக்கமாகும்.

**03.13. சக்தி சார்ந்த கல்வி நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல்**

2016 ஆம் ஆண்டு பிராந்திய, மாகாண, தேசிய மட்டங்களில் மதிப்பீடுகளின் முன்னேற்றங்களை மீளாய்வு செய்து அதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் எதிர்காலத்தில் செயற்படுத்தப்படவுள்ளது.